

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே முத்தப்பன்பட்டியில் அமைந்துள்ள முன்னாள் சபாநாயகர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் சேடபட்டி இரா.முத்தையா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாரது நினைவிடத்தில் கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மற்றும் கழகத்தினர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். உடன் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், திருமதி.பாரதி மணிமாறன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், குடும்பத்தினர் பங்கேற்றனர்.



நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் திருப்புவனம் வட்டம், கீழடி அருங்காட்சியகத்தில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் சிந்துவெளி ஆய்வு மையம் இணைந்து நடத்திய கீழடியில் சிந்துவெளி நாள் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தலைமையில் பங்கேற்று, நூல்கள் மற்றும் ஆய்விதழ்களை வெளியிட்டு சிறப்பித்தனர். உடன் சிந்துவெளி ஆய்வு மைய மதிப்புறு ஆலோசகர் ஆர். பாலகிருஷ்ணன் , மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் ,இயக்குநர் (இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை, டெல்லி) அமர்நாத் ராமகிருஷ்ணன் , மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி , இணை இயக்குநர் (தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை) முனைவர் இரா.சிவானந்தம், கல்வி மற்றும் ஆய்வு ஆலோசகர் (தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை) பேரா.கா.ராஜன், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெஃபி கிரேசியா, இயக்குநர் (ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்) முனைவர் சுந்தர் கணேசன் உட்பட தொல்லியல் துறையைச் சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில்

# தென்காசி வடக்கு மாவட்டத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ மாபெரும் பொதுக்கூட்டம்!

## சே.மெ.மதிவதினி சிறப்புரையாற்றினார்!

தென்காசி, செப். 23 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மானம் ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் குருவிகுளம் பேரறிஞர் அண்ணா திடலில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு,சீனிவாசன், பரமகுரு,மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி, மாவட்ட அவைத்தலைவர் சுப்பையா,மாவட்ட பொருளாளர் இல.சரவணன், துணை செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை,புனிதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. குருவிகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் கடற்கரை வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பிரபாகரன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் சே.மெ. மதிவதினி பங்கேற்று பேசியதாவது.

தமிழகத்தில் இரண்டு அணி, அதில் ஓரணி,கருப்பு சிவப்பு அணி. எதிரணி காவி கரை வேட்டியோடு வரக்கூடிய பி.ஜே.பி. - அ.தி.மு.க. அணி,இந்த கூட்டணி உங்கள் குழந்தைகளுடைய கல்வி கனவை நாசமாக்கக்கூடிய,எடப்பாடி தலைமையிலான அணி,அது எடப்பாடி தலைமைதான் என நான் சொல்கிறேன். அவர் சொல்லவில்லை. இன்னும். பி.ஜே.பி.தலைமையா? எடப்பாடி தலைமையா? அவங்களே இன்னும் முடிவு பண்ணவில்லை. அடிமை அணியான,காவி அணியான, பா.சி.ச அணியான எடப்பாடி பி.ஜே.பி.யோடு இருக்கப் போகிறோமோ? அல்லது நம் பிள்ளைகளின் கல்விக்காக நாள்தோறும் முதுகெலும்போடு நின்று சண்டை செய்து கொண்டிருக் கக்கூடிய தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்று உறுதியோடு நிற்க க்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் இருக்க போகிறோமா என்பதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

ஜாதிய கலவரத்தை தூண்டிவிட்டு, மக்களை துண்டாடக்கூடிய சித்தாந்தத்தை கொண்டது பி.ஜே.பி. மத கலவரத்தை தூண்டி பல மாநிலங்களை கையகப்படுத்தி உள்ளது. மோடி,அமித்ஷா, அவர்களுடைய திட்டத்தை எல்லா மாநிலத்திலும் நிறைவேற்றி விட்டார்கள். தி.மு.க.ன்னா கருப்பு சிவப்பு கரை வேட்டி கட்டிக்கிட்டு வரும் கட்சிக்காரங்கனு நினைக்க கூடாது. ஒவ்வொரு இடத்திலும் உயிரை பணயம் வைத்து அரசியல் செய்யக்கூடிய சூழலையும் கூட தி.மு.க.செய்யும்.ஓரணியில் நிற்கிறோம் என்று இன்றைக்கு இந்த பொறுப்பாளர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள்.நீங்கள் அ.தி.மு.க.வில் இருந்தாலும் சரி, பி.ஜே.பி.யில் இருந்தாலும் சரி, உங்கள் பிள்ளை கல்விக்காக, உங்கள் இளைஞர்களின் வேலைவாய்ப்புக்காக,இந்தி திணிப்பை எதிர்ப்பதற்காக, பி.ஜே.பி.யின் சர்வாதிகாரத்தை எதிர்ப்பதற்காக,தமிழ்நாட்டு மக்களே, மான உணர்ச்சி கொண்ட தமிழர்களே

ஓரணியில் திரளுங்கள். அந்த அணி,திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான அணி,2026 இல் தமிழ்நாடு போராடும்,வெல்லும். இன்னும் பல பத்தாண்டுகளுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நிலைத்து நிற்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்வில் கழக இளம் பேச்சாளர் ஜிந்தகி, பொதுக்குழு உறுப்பினர்கள் பராசக்தி,மகேஸ்வரி,ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன்,பொன்.முத்தையா பாண்டியன்,அன்புக்கரசு,சேர்மதுரை கிறிஸ்டோபர்,பெரிய துரை, வெள்ளத்துரை,பால்ராஜ், குணசேகரன்,நகர செயலாளர்கள் நாகூர் கனி,மு.பிரகாஷ்,பேரூர் செயலாளர்கள் கே.டி. சி.குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன்,மாரிமுத்து சேதுசுப்பிரமணியன்,அணி தலைவர்கள் ராஜ் என்ற கருப்பசாமி, கலைச்செல்வன்,அணி அமைப்பாளர்கள் உதயகுமார், கிப்ஸன், பிச்சையா அப்பாஸ், மணிகண்டன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட விவசாய அணி தலைவர் பாலசுப்ரமணியன் நன்றி உரையாற்றினார்.

முன்னதாக கூட்டத்தில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ‘ஓரணியில் தமிழ்நாடு’ ஏற்பு தீர்மானங்களை வாசிக்க அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

### சதுரங்கப் போட்டிகளில் பல சாதனைகள் படைத்த

# குவைத் வாழ் தமிழ் மாணவனுக்கு ‘இளம் சாதனையாளர் விருது’!

## தி.மு.க. அயலக அணி – குவைத் சார்பில் வழங்கல்!

குவைத், செப். 23 -

குவைத் நாட்டில் சதுரங்கப் போட்டிகளில் பல சாதனைகள் படைத்து வரும் குவைத் வாழ் தமிழ் மாணவனுக்கு “இளம் சாதனையாளர் விருது” , தி.மு.க., அயலக அணி. குவைத் சார்பில் வழங்கி சிறப்பிக்க ப்பட்டது.

தமிழன் எங்கு இருப்பினும் தமிழனே, தமிழனோடு கரம் கோர்ப்பது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே எனும் மக்கள் முதல்வர், திராவிட மாடல் அரசர், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைப்படி,

கழக அயலக அணியின் தலைவர் அண்ணன் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா ஆகியோரின் வழிகாட்டுதலின்படி

இளம் வயதில் சதுரங்க போட்டிகளில் பல சாதனைகள் படைத்து , அபுதாபியில் நடந்த *Abudhabi Chess festival/ Junior Open Classical Chess champion* போட்டியில் முதல் பரிசை வென்று இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ள குவைத் வாழ் தமிழ் மாணவன் மித்திலேஷ் ரஞ்சித் குமாரை வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம். குவைத்.

(தி.மு.க., அயலக அணி குவைத்) சார்பாக தி.மு.கழக அயலக அணி குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் நிர்வாகிகள் அனைவரும் நேரில் சந்தித்து வாழ்த்து கூறி “இளம் சாதனையாளர்” எனும் விருது வழங்கி பாராட்டினர்..

மாணவன் மிதிலேஷ் ரஞ்சித்குமார் பற்றி..

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை சேர்ந்த ரஞ்சித்குமார் , சாந்தி இவர்களுக்கு இரண்டு குழந்தை கள் மகன் மித்திலேஷ் ரஞ்சித்குமார் , மகள் ஹர்ஷிகா ரஞ்சித்குமார். இவர்கள் குடும்பத்துடன் குவைத் நாட்டில் வசித்து வருகின்றனர்,

தந்தை ரஞ்சித்குமார் எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் சிவில் பொறியியல் கட்டுமான நிபுணராக பணிபுரிகிறார்.

மித்திலேஷ் ரஞ்சித்குமார் தனது ஐந்து வயது முதல் ஆர்வத்துடன்செஸ் விளையாடுகிறார், மேலும் கண்ணனை கட்டிக் கொண்டு செஸ் ஆடுவதிலும் திறமை கொண்டவர். தினந்தோறும் தனது பள்ளி பாட வேலைகளை முடித்த பிறகு விளையாட்டுக்கான நேரத்தை ஒதுக்கி செஸ் பயிற்சி செய்கிறார்.

இந்த ஆண்டு 31வது அபுதாபி சதுரங்க திருவிழா - 2025 , ஜூனியர் பிரிவில் மூன்றாவது முறையாக துபாய் அபுதாபியில் சதுரங்க திருவிழாவில் பங்கேற்றார், ஜூனியர் கிளாசிக்கல் போட்டிகள் ஆகஸ்ட் 15 முதல் ஆகஸ்ட் 21 வரை நடத்தப்பட்டன, ஜூனியர் பிரிவில் இதில் உலகம் முழுவதிலும் இருந்து 80 நாடுகளைச் சேர்ந்த 315 சிறந்த சதுரங்க சாம்பியன் வீரர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டிகளில் மித்திலேஷ் ரஞ்சித்குமார் 9 இல் 8 மதிப்பெண்களுடன் போட்டியை முடித்தார், போட்டி முழுவதும் தோற்காமல் இருந்தார். இதன் விளைவாக, அவர் ஜூனியர் சாம்பியனாக மித்திலேஷ் ரஞ்சித்குமார் சாம்பியன் பட்டம் வென்றார்.

உலக அரங்கில் இந்தியாவைப் பிரதிநிதித்து வப்படுத்தினார். கூடுதலாக, இந்த போட்டியில் இருந்து அவர் 66.4 FIDE ELO புள்ளிகளைப் பெற்றார்

முன்னதாக 2023 ஆம் ஆண்டு 29வது அபுதாபி சதுரங்க திருவிழாவில் அவர் 12 வயதுக்குட்பட்டோர் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும்,

கடந்த ஆண்டு 2024 ஆம் ஆண்டு 30வது அபுதாபி சதுரங்க விழா 12 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தங்கப்பதக்கத்தையும் வென்றார்.

அது மட்டுமல்லாமல், அவர் உலக அளவிலும் தேசிய அளவிலும் , மற்றும் மாவட்ட அளவிலும் பல போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

இந்தியாவில் CBSE தேசிய சதுரங்க சாம்பியன்ஷிப் 20222023 ஜனவரி 14 ஆம் தேதி முதல் 17 வரை பஞ்சாப் மாநிலம் சண்டிகரில் உள்ள புரூக்ஃபீல்ட் சர்வதேச பள்ளியில் நடைபெற்றது, இதில் மித்திலேஷ் ரஞ்சித்குமார் 11 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தனிநபர் சாம்பியன் மற்றும் போர்டு சாம்பியன் பட்டத்தையும் வென்றுள்ளார்.

குவைத்தில் 2024 2025, ஏப்ரல் 24 , 24 மற்றும் 25 ஆம் தேதிகள் நடந்த 4வது வஃப்ரா கல்ஃப் நிதி சேவைகள் ராபிட் சதுரங்க சாம்பியன்ஷிப்பில் இரண்டாம் இடம் பிடித்து வெள்ளி பதக்கம் வென்றார்.

இந்தியாவில் , பாண்டிச்சேரியில் ஜூன் - 2023 2024 ல் நடைபெற்ற தேசிய அளவிலான சதுரங்க பள்ளி சாம்பியன்ஷிப் 12 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தனிநபர் பிரிவில் வெண்கல பதக்கம் வென்றார்.

குவைத்தில் 2025 , மே மாதம் நடந்த பிளிட்ஸ் சதுரங்க போட்டியில் முதலாவது இடம் பிடித்து தங்க பதக்கம் வென்றார்.

இவ்வாறு பல சாதனைகள் செய்து சதுரங்க போட்டியில் சாதித்து வரும் மாணவனை தி.மு.க, அயலக அணி குவைத் அமைப்பின் நிர்வாகிகள் நேரில் சென்று பாராட்டியது அவருக்கு ஊக்கத்தையும் அடுத்த கட்ட நகர்வுகளுக்கான உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

இந்நிகழ்வில் அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவுமணி, இணைச் செயலாளர் ஆயங்குடி சையது முஸ்தபா துணை செயலாளர்கள் முத்து ப்பேட்டை ம. சபரிவாசன், உளுந்தூர் பேட்டை மு.நஜீர்அகமது, துணை பொருளாளர் திருவடத்தனூர் ஏ.எஸ்.முகமது ரபீக், தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் மேட்டுவிளை ஐ.ஜானவாஸ், ஒட்டுநர் நல அணி செயலாளர் திருச்சி ஏ.ஜே.எம்.இஷாக் ஜக்காரியா, தொண்டரணி துணை செயலாளர் உடையார்பாளையம் செந்தில்குமார். ஒட்டுனர் நல அணி துணை செயலாளர். லட்சுமங்குடி சசிகுமார் ஆகியோர் கலந்துகொண்டு சாதனைச் சிறுவனை வாழ்த்தி மகிழ்ந்தனர்.





இளம் வயதில் சதுரங்க போட்டிகளில் பல சாதனைகள் படைத்து , அபுதாபியில் நடந்த Abudhabi Chess festival/ Junior Open Classical Chess champion போட்டியில் முதல் பரிசை வென்று இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ள குவைத் வாழ் தமிழ் மாணவன் மித்திலேஷ் ரஞ்சித்குமாரை வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம். குவைத். (தி.மு.க., அயலக அணி குவைத்) சார்பாக தி.மு.கழக அயலக அணி குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் நிர்வாகிகள் அனைவரும் நேரில் சந்தித்து வாழ்த்து கூறி ”இளம் சாதனையாளர் எனும் விருது வழங்கி பாராட்டினர்

### திரைத்துறைக்கு தொடர்ந்து ஊக்கமும் நம்பிக்கையும் வழங்கி வரும்

# முதல்வர் - துணை முதல்வருக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில் நன்றி!

## சங்க 69 ஆம் ஆண்டு பேரவைக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப். 23 -

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் 69 ஆம் ஆண்டு பேரவைக்கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு

பாரம்பரியமிக்க நமது தென்னிந்திய நடிகர் சங்கத்தின் வளர்ச்சிக்காகவும், உறுப்பினர் நலனுக்காகவும் அனைத்து வகையிலும் ஆதரவளித்து உறுதுணையாக இருந்து, சென்னையை அடுத்த பையனூரில் குடியிருப்புகள் கட்ட ஒதுக்கப்பட்ட குத்தகை நிலத்தின் பயன்பாட்டை கூடுதலாக மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்து புதிய அரசாணை வழங்கிய, திரையரங்குகளில் வெளியிடப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்படும் கேளிக்கை வரியை 8% இருந்து 4% ஆக குறைத்து அரசாணை வெளியிட்டு, பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த திரைப்படங்களுக்கான தமிழ்நாடு அரசு விருதுகளை வழங்கும் பொருட்டு விருதுக்குழு ஒன்றை அமைத்து திரைத்துறைக்கு தொடர்ந்து ஊக்கமும், நம்பிக்கையும் வழங்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், சங்க உறுப்பினரும் தமிழ்நாடு துணை முதலமைச்சரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் K.K.S.S.R. ராமச்சந்திரன் அவர்களுக்கும் செய்தி மக்கள் தொடர்புத்துறை மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு செயலாளர்களுக்கும், அரசுத் துறை இயக்குனர்களுக்கும் மற்றும் அரசுத்துறை அதிகாரிகளுக்கும் தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவிக்கும் தீர்மானத்திற்கு பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

13.10.2024 முதல் 21.09.2025 வரை நடந்த அனைத்து செயற்குழு கூட்டங்களில் செயற்குழு உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அனைத்திற்கும் பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

2024-25 ஆண்டறிக்கை மற்றும் 2024-2025 ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட வரவு-செலவு கணக்கறிக்கைக்கு பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டு தீர்மானமாக நிறை வேற்றப்பட்டது.

தென்னிந்திய நடிகர் சங்கத்தில் 2025-2026-ஆம் ஆண்டுக்கான சங்க ஆலோசகராக கிருஷ்ணா ரவீந்திரன் அவர்களை நியமிக்க பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டு தீர்மானமாக நிறைவேற்ற ப்பட்டது.

தென்னிந்திய நடிகர் சங்கத்தில் 2025-2026-ஆம் ஆண்டுக்கான சங்க கணக்குத் தணிக்கையாளராக ஸ்ரீராம்சுந்தர், SRNR & அசோசியேட்ஸ் அவர்களை நியமிக்க பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டு தீர்மானமாக நிறை வேற்றப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.





தேனி வடக்கு மாவட்டம் மற்றும் நகரக் கழக சார்பாக தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடுதீர்மானம் ஏற்பு பொது கூட்டம் பெரியகுளம் நகரபகுதி அண்ணா திடல் பழைய பேருந்து நிலையம் அருகே வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. பெரியகுளம் நகர செயலாளர் முகமது இலியாஸ் வரவேற்புரை ஆற்றினார். சரவணக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட அவை தலைவர் பி.டி.செல்லபாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம் போடி தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் போஸ் வெங்கட், தலைமைக் கழக பேச்சாளர் குமரி பிரபாகரன், இளம் பேச்சாளர்கள் முத்து செல்வம், சுருதி. ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். மற்றும் ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், சார்பு அணிநிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.